நாள்.18.07.2025.

அசல் வழக்கு எண்.109/2019

பி சா.2

பெயர்.லிங்கதுரை

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

வாதியின் வழக்கு எனக்கு தெரியுமா என்றால் ஜேக்கப் மீது சொத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதி கோரிய பரிகாரம் எனக்கு தெரியுமா என்றால் வாதி அவருடைய சொத்து என பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.4 வீட்டு பட்டா சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.182. நான் எனது முதல் விசாரணையில் தாவா சொத்து என் வீட்டிற்கு அருகில் உள்ளது என கூறி உள்ளேன் என்றால் அது தவறு. அதேபோல் வழக்கு சொத்திற்கு அருகில் பல குடும்பங்கள் இருப்பதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறி உள்ளேன் என்றால் சரியல்ல, தோட்டங்கள் உள்ளது.

பிரதிவாதி வழக்கு சொத்தை 2011 ல் தன் மகனுக்கு எழுதி கொடுத்தாக கூறி உள்ளேன் என்றால் ஆண்டு தெரியாது, 5 ஆண்டுகள் இருக்கும். மேற்படி எழுதி கொடுத்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் பிரதிவாதி தன்னுடைய ஒரு மகனுக்கு பாகம் வைத்து கொடுத்தாக சொன்னார். பிரதிவாதி எப்போது சொன்னார் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சொன்னார். மேற்படி எழுதி கொடுக்கபட்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, இடம் தான் தெரியும். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் சுமாராக தெரியும்.

பிரதிவாதி பி.சா.ஆ.1 ஆவணம் யாருக்கு எழுதி கொடுத்தார் என்றால் கிங்ஸ்லி ரூபன், செல்வகுமார் ஆகியோருக்கு எழுதி கொடுத்தார். என்னிடம் காட்டபடும் பி.சா.ஆ.1 ஆவணத்தில் எந்தெந்த சொத்துகளை எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு படிக்க தெரியாது. என்னிடம் காட்டபடும் பிராதில் உள்ள வழக்கு சொத்தின் சர்வே எண்.238/1, 238/2 என்று உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி எழுதி கொடுத்த ஆவணத்தில் மேற்படி சர்வே எண்கள் இல்லை என்றாலும், எனக்கு எழுத படிக்க தெரியும் என்றாலும், நான் வேண்டும் என்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சர்வே எண்ணும், தாவா சொத்தின் சர்வே

எண்ணும் வெவ்வேறு என்றாலும், பி.சா.ஆ.1 வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் வேலை செய்கிறேன் என்றால் சரியல்ல, கூலி வேலை செய்கிறேன். பிரதிவாதி சொல்லி தான் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு வாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது முதல் விசாரணையில் வாதியை எனக்கு தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதியின் குடும்பத்தில் பல நபர்கள் உண்டு, அவர்களுக்கு தெரியாமல் இந்த வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பற்றி தெரியாது. வாதியின் வீட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எத்தனை வருடமாக எனது ஊரில் வசிக்கிறேன் என்றால் பிறந்ததில் இருந்தே இருக்கிறேன். எனது வீட்டில் இருந்து பிரதிவாதி வீடு 700 அடி துாரத்தில் உள்ளது. பிரதிவாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை, என் ஊர்க்காரர்.

எனக்கு வழக்கை பற்றி எந்த விவரமும் தெரியாது என்றும், நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.4 முதல் 6 வரையிலான ஆவணங்கள் எனது தொடர்புடைய ஆவணங்கள் என்றும், வழக்கு சொத்திற்கும் மேற்படி ஆவணங்களுக்கும் சம்பந்தமில்லை என்றும், சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணங்களை தாக்கல் செய்து பிரதிவாதி எங்கள் ஊர்க்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2025.07.19 11:55:41 +0530